# அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை

உயர்கல்விக்கு உதவும் கரங்கள்.

## சமுதாயத்தில் அடிமட்டத்தில் இருப்பவர்கள் உயர்வதற்கான ஒரே கருவி “கல்வி”

### கல்விக்கோ முனைவர். கோ.விசுவநாதன், அறக்கட்டளைத் தலைவர்



கல்வியில் உயர்ந்த நாடுகள்தாம் இன்று பொருளாதாரத்திலும் உயர்ந்திருக்கிறது, கல்வியில் பின்தங்கிய நாடுகள் பொருளாதாரத்திலும் பின்தங்கியிருக்கும். எனவே, ஏழை மாணவர்களின் கல்வித் தரம் உயர உயர்கல்விக்கு உதவி செய்தால் அதுவும் பெண் கல்விக்கு உதவி செய்தால் அவர்களின் கல்வி மட்டுமில்லாமல் அவர்களின் வருங்கால சந்ததிகளின் கல்வி வளர்ச்சியும், பொருளாதார வளர்ச்சியும், சமூகத்தின் வளர்ச்சியும் ஒருசேர உயரும் என்பது எனது நம்பிக்கை. கல்வியின் தேவைபற்றி, அதிலும் பெண் கல்வியைப் பற்றி நம் முன்னோர்கள் அதிகமாக எடுத்துரைத்துள்ளனர். பாவேந்தர் பாரதிதாசன் பெண் கல்வியைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது, “மலைவாழை அல்லவோ கல்வி அதை வாயார உண்ணுவாய் எந்தன் புதல்வி” என்றும், அவரே கல்வி பயிலாத பெண்களைப் பார்த்து ”கல்வி இல்லாத பெண்கள் களர் நிலம், அந்நிலத்தில் புல் விளைந்திடலாம், நல்ல புதல்வர்கள் விளைதல் இல்லை” என்றும் கூறுகிறார். 16 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த அதிவீரராம பாண்டிய மன்னன், “கற்கை நன்றே கற்கை நன்றே பிச்சை புகினும் கற்கை நன்றே” பிச்சை எடுத்தாவது கல்வியைக் கற்க வேண்டுமென்று கூறியுள்ளார். 18 முதல் 23 வயதுவரை உள்ளோரின் உயர்கல்வியின் மொத்த சேர்க்கை விகிதம் (Gross Enrolment Ratio - GER) உலகளவிலும், நமது இந்தியாவிலும் கணிசமாக அதிகரித்துள்ளது என்பதைக் கூறுகிறது ஒன்றிய கல்வித்துறை அமைச்சகத்தின் All India Survey on Higher Education (AISHE) அறிக்கை 2021-22. அறிக்கையின்படி இந்தியா GER-இல் 28.4 சதவீதமாகவும், மாநிலங்களளவில் தமிழ்நாடு 50 சதவீதமாகவும் உள்ளது.

1949 ஆம் ஆண்டு சமர்ப்பிக்கப்பட்ட டாக்டர். இராதாகிருஷ்ணன் கமிஷன் அறிக்கையின்படி நமது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (Gross Domestic Product-GDP) 6 சதவிகிதம் கல்விக்காகச் செலவிடப்படவேண்டும். ஆனால், 75 ஆண்டுகள் கடந்தும் நாம் இன்னும் 3 சதவிகிதம் மட்டுமே ஒதுக்குகிறோம். தற்பொழுது மத்தியிலும், மாநிலத்திலும் ஆட்சியில் உள்ளவர்கள் GER, GDP சதவிகிதத்தைக் கருத்தில் கொண்டு உயர்கல்விக்கு அதிகமாகச் செலவிட வேண்டும் என்பதை வலியுறுத்துகிறேன். எங்களது விஐடி குழுமத்திலுள்ள (வேலூர், சென்னை, ஆந்திரப்பிரதேசம், போபால் வளாகம்) ஊழியர்கள் ஒருநாள் ஊதியத்தை வருடா வருடம் எனது பிறந்தநாள் அன்று அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளைக்கு நன்கொடையாக அளித்து வருகின்றனர். இந்த அறக்கட்டளை இதுவரை 8,680 மாணவ மாணவியருக்கு ரூபாய் 10,02,93,945 (10 கோடியே 2 லட்சத்து தொண்ணூற்று மூவாயிரத்துத் தொள்ளாயிரத்து நாற்பத்து ஐந்து ரூபாய்) உயர்கல்விக்கு உதவித்தொகையாகக் கொடுத்து இருக்கின்றது.

### திரு. பாலாஜி லோகநாதன், அறக்கட்டளை உறுப்பினர்



“தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு”.

என்ற குறளில் ஐயன் வள்ளுவன் கல்வியின் சிறப்பை மிக அழகாக எடுத்துரைத்துள்ளார். கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு, கல்விதான் சிறந்தது. அனைத்து ஏழை, எளிய மாணவ, மாணவியர்கள் உயர்கல்வி பெற வேண்டும் என்னும் நல்ல நோக்கத்தோடு கல்விக்கோ முனைவர் கோ.விசுவநாதன் ஐயா அவர்கள் அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை என்னும் அறக்கட்டளையை ஏற்படுத்தி அதன் மூலம் வேலூர், திருப்பத்தூர், இராணிப்பேட்டை மாவட்டத்தில் தகுதியான மாணவ, மாணவிகள் உயர்கல்வியைத் தொடர்ந்து பயின்று வருவதற்கு இவ்வறக்கட்டளை மூலம் தொண்டு செய்து வருகின்றார். ஏழை மாணவ, மாணவர்களின் உயர்கல்விக் கனவினை நனவாக்கி வரும் நம் G.V. ஐயா அவர்களின் கல்வித்தொண்டு வளர்பிறை போல வளர வாழ்த்துகிறேன். மாணவர்களின் கல்விக்கான இவ்வறக்கட்டளையில் அறங்காவலராக என்னுடைய சிறு பங்களிப்பு குறித்து மிகப்பெருமையாக உணர்கிறேன்.

## திருமதி. அஞ்சு சக்திவேல், அறக்கட்டளை உறுப்பினர்



அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை நம்பிக்கை மற்றும் வாய்ப்பின் கலங்கரை விளக்கமாக இயங்கி எண்ணற்ற மாணவ, மாணவியர்களின் உயர்கல்வியை வழங்கி வருகின்றது. தொலைநோக்குப் பார்வையாளரான கல்விக்கோ முனைவர் கோ.விசுவநாதன் ஐயா அவர்களால் நிறுவப்பட்ட இவ்வறக்கட்டளை திருவள்ளுவரின்,

“தாமின் புறுவது உலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்”

என்னும் திருக்குறளுக்குச் சான்றாக செயல்பட்டு வருகிறது. G.V. ஐயா அவர்களின் வாழ்க்கை சமூக மாற்றங்களையும், அறிவே உலகைத் தாங்கும் உண்மையான சக்தி என்பதையும் நிரூபித்துள்ளன. அவரது வழிகாட்டுதலின் கீழ், அறக்கட்டளையால் மாணவர்கள் தங்கள் கனவுகளை அடைந்தும் சமூகத்திற்கு அர்த்தமுள்ள பங்களிப்பிற்கான பாதைகளையும் உருவாக்கியுள்ளனர். கல்வியில் சிறந்து விளங்குவதற்கான அவரது அசைக்க முடியாத நம்பிக்கையும் அர்ப்பணிப்பும் மாணவர்கள் யாவரும் உயர்கல்வி பெற வேண்டும் என்பதை உறுதி செய்கின்றன. அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை மாணவர்களுக்கு வலிமை மற்றும் உத்வேகத்தின் தூணாக உள்ளது. கல்விக்கோ முனைவர் கோ.விசுவநாதன் ஐயா அவர்களின் அறக்கட்டளை, டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாமின் கனவுகள் போல, வானத்தைத் தொட்டு, சிறகு விரித்துப் பறக்கக் கற்றுக் கொடுத்துக்கொண்டிருக்கின்றன. இவ்வறக்கட்டளையில் என்னுடைய சிறு பங்களிப்பு இருப்பதை நினைத்து மிகப் பெருமையாக உணர்கிறேன்.

## அரசினர் மேல்நிலைப் பள்ளிகளில் உயர்கல்வி வழிகாட்டி நிகழ்வுகள்







அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை 2024 சனவரி மற்றும் பிப்ரவரி மாதத்தில் வேலூர், திருப்பத்தூர், இராணிப்பேட்டை மாவட்டத்தில் 119 அரசு மேல்நிலைப் பள்ளிகளில் 10,649 மாணவ, மாணவியருக்கு உயர்கல்வி விழிப்புணர்வு ஏற்படுத்தி உள்ளது. இந்நிகழ்வுகள் மூலம் 12 ஆம் வகுப்பு முடித்துவிட்டு உயர்கல்வியில் என்ன படிக்கலாம், எங்கு படிக்கலாம், அதனுடைய தேவை, உயர்கல்வியின் முக்கியத்துவம் மற்றும் அறக்கட்டளையின் கல்வி உதவித்தொகை திட்டத்தைப் பற்றியும் கிராமப்புறங்களில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளிகளில் படிக்கும் மாணவ, மாணவியருக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளது.







## உயர்கல்வி அறக்கட்டளை உதவித்தொகை வழங்குவதற்கான நேர்முகத் தேர்வு – பகுதி II

2023-24 ஆம் கல்வியாண்டிற்கான கல்வி உதவித்தொகை வழங்குவதற்கான இரண்டாம்கட்ட நேர்முகத் தேர்வு 2024 மார்ச்சு 06 முதல் 24, வரை நடைபெற்றது. இதில் வேலூர், காட்பாடி, கீ.வ. குப்பம், குடியாத்தம், பேர்ணாம்பட்டு, அணைக்கட்டு, கணியம்பாடி, மாதனூர், ஆலங்காயம், ஜோலார்பேட்டை, திருப்பத்தூர், கந்திலி, நாட்றம்பள்ளி, ஆர்க்காடு, திமிரி, வாலாஜா, காவேரிப்பாக்கம், சோளிங்கர், நெமிலி, அரக்கோணம் மற்றும் சவ்வாது மலை ஒன்றியத்திற்குட்பட்ட 324 மாணவ, மாணவியர் தம் பெற்றோர்களுடன் கலந்துகொண்டனர். நேர்காணலின் மூலம் மாணவர்களைத் தேர்ந்தெடுப்பதற்காகப் பெற்றோர் மற்றும் மாணவர்களிடம் குடும்பப் பொருளாதாரச் சூழ்நிலையை அறிய, அறக்கட்டளைப் பணியாளர்கள் உதவித்தொகை விண்ணப்பித்த மாணவர்களின் இருப்பிடத்திற்குச் சென்று களப்பணி செய்து வருகின்றனர்.










## 2023–24 கல்வியாண்டிற்கான கல்வி உதவித்தொகை வழங்குதல் – பகுதி II






2023 - 24 கல்வியாண்டிற்கான இரண்டாம்கட்ட கல்வி உதவித்தொகை வழங்கும் நிகழ்ச்சி 2024 ஏப்ரல் 03, அன்று வேலூர் விஐடி வளாகத்தில் உள்ள அண்ணா அரங்கத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விஐடி வேந்தரும் அறக்கட்டளைத் தலைவருமான கல்விக்கோ முனைவர். கோ. விசுவநாதன் அவர்கள் தலைமை வகித்தார். நிகழ்வில் சிறப்பு விருந்தினராக மாண்புமிகு நீதியரசர் கே.பி.கே.வாசுகி, மேனாள் நீதிபதி, சென்னை உயர்நீதி மன்றம், தலைவர், தமிழ்நாடு மாநிலத் திரைப்பட விருதுகள் தேர்வுக் குழு அவர்கள் கலந்துகொண்டு மாணவர்களுக்குக் கல்வி உதவித்தொகை வழங்கிச் சிறப்புரை ஆற்றினார். அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளையின் செயலாளர், பொருளாளர், அறங்காவலர்கள், மற்றும் நிதிக்குழுத் தலைவர் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர். இந்நிகழ்ச்சியில் 598 மாணவ மாணவியர்க்கு ரூபாய். 63,38,000/- கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டது.


இலவச கல்வி கொடுக்கும் ஆட்சியாளர்களை பார்க்க முடியவில்லை
அனைவருக்கும் உயர்கல்வி அறக்கட்டளை விழாவில் விஐடி வேந்தர் ஆதங்கம்

அனைவருக்கும் உயர்கல்வி திட்டம்
இந்தியாவிலேயே முன்னோடி திட்டமாக செயல்படுகிறது
சென்னை உயர் நீதிமன்ற முன்னாள் நீதிபதி கே.பி.கே.வாசுகி பாராட்டு



## உயர்கல்வி உதவித்தொகை பெற விண்ணப்பங்கள் வழங்குதல் : 2024 – 25

அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளையின் உயர்கல்வி உதவித்தொகை பெற, வேலூர், திருப்பத்தூர், இராணிப்பேட்டை மாவட்டங்கள் மற்றும் திருவண்ணாமலையில் உள்ள சவ்வாதுமலை ஒன்றியத்திற்குட்பட்ட மாணவ, மாணவியர்களுக்கு 2024 மே 22, முதல் 30 வரை விண்ணப்பங்கள் வழங்கப்பட்டன. மாணவர்கள் எளிதில் அணுகக்கூடிய வகையில் 10 உதவி மையங்கள் அமைத்து அவற்றின் மூலம் 7,026 மாணவ, மாணவியருக்கு உயர்கல்விக்கான உதவித்தொகை விண்ணப்பம் வழங்கும் தகவல்கள் அனைத்துத் தமிழ் நாளிதழ்களில் வெளியிடப்பட்டன.




தினகரன் 4 • Dinakaran • Vellore • 24.5.2024

அனைவருக்கும் உயர்கல்வித்திட்டத்தின் கீழ்

பொருளாதாரத்தில் பின்தங்கிய மாணவர்கள் கல்வி உதவித்தொகைக்கு விண்ணப்பிக்கலாம்

விஐடி வேந்தர் ஜி.விசுவநாதன் தகவல்


தினத்தூதியன் 24.05.2024 5

பொருளாதாரத்தில் பின்தங்கிய மாணவர்கள் கல்வி உதவித்தொகை பெறுவதற்கு விண்ணப்பிக்கலாம்

அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை தலைவரும் விஐடி வேந்தருமான டாக்டர்.கோ. விசுவநாதன் அழைப்பு

## SHINE பகுதி XI நிறைவு மற்றும் SHINE பகுதி XII தொடக்க விழா

அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை, வேலூர், Pearltri Foundation, சென்னை மற்றும் ஆஸ்பயர் சிஸ்டம்ஸ் (இந்தியா) பிரைவேட் லிமிடெட், சென்னை இணைந்து நடத்திய தகவல் தொழில்நுட்பத் திறன் மேம்பாட்டுப் பயிற்சி SHINE XI பகுதி நிறைவு மற்றும் SHINE XII பகுதித் தொடக்க விழா விஐடி வளாகத்தில் 2024 சனவரி 05, அன்று நடைபெற்றது. அறக்கட்டளை உறுப்பினர் மருத்துவர் எஸ்.நர்மதா அசோக், இயக்குநர், நலம் மருத்துவமனை அவர்கள் தலைமையேற்றுப் பயிற்சி பெற்றவர்களுக்குச் சான்றிதழ் வழங்கினார். திருமதி. ஸ்னிக்தா அகர்வால், Sr. HR Partner ஆஸ்பயர் சிஸ்டம்ஸ், திரு. சபாபதி சண்முகம், துணை மேலாளர் ஆஸ்பயர் சிஸ்டம்ஸ், அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை உதவி திட்ட இயக்குநர் திரு. ப.சுந்தர் ராஜ் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். இந்நிகழ்வில் பயிற்சி பெற்ற மற்றும் பெறப்போகும் மாணவர்கள் கலந்துகொண்டு பயன் பெற்றனர்.



## SHINE பகுதி XII நிறைவு மற்றும் SHINE பகுதி XIII தொடக்க விழா

அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை, வேலூர், Pearltri Foundation, சென்னை மற்றும் ஆஸ்பயர் சிஸ்டம்ஸ், (இந்தியா) பிரைவேட் லிமிடெட், சென்னை இணைந்து நடத்திய தகவல் தொழில்நுட்பத் திறன் மேம்பாட்டுப் பயிற்சி SHINE XII பகுதி நிறைவு மற்றும் SHINE XIII பகுதித் தொடக்க விழா விஐடி வளாகத்தில் 2024 ஏப்ரல் 09, அன்று நடைபெற்றது. அறக்கட்டளை உறுப்பினர் திரு. பாலாஜி லோகநாதன், ஸ்ரீ ஆற்காடு மகாலட்சுமி மகளிர் செவிலியர் கல்லூரியின் தலைவர் அவர்கள் தலைமையேற்றுப் பயிற்சி பெற்றவர்களுக்குச் சான்றிதழ் வழங்கினார். திருமதி. அனிதா, துணை மேலாளர், Talent Nurturing, ஆஸ்பயர் சிஸ்டம்ஸ், திருமதி. ஸ்னிக்தா அகர்வால், Sr. HR Partner ஆஸ்பயர் சிஸ்டம்ஸ், அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை உதவி திட்ட இயக்குநர் திரு. ப.சுந்தர் ராஜ் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். திரு. எஸ்.சாத்தப்பன், பொதுமேலாளர், CSR, ஆஸ்பயர் சிஸ்டம்ஸ் அறங்காவலர், Pearltri Foundation அவர்கள் சிறப்புரையாற்றினார். இந்நிகழ்வில் பயிற்சி பெற்ற மற்றும் பெறப்போகும் மாணவர்கள் கலந்துகொண்டு பயன் பெற்றனர்.






## கல்வி உதவித்தொகை பெற்ற மாணவர்களின் குரல்

**ச. சர்மிளா**



நான் வேலூர் மாவட்டம், காட்பாடி தாலுக்கா, கீழ்மோட்டூர் பகுதியில் வசிக்கிறேன். என்னுடைய அப்பா வெல்டிங் வேலை செய்கிறார். அம்மா தனியார் நிறுவனத்தில் பாதுகாவலர் (செக்யூரிட்டி) வேலை செய்கிறார். கிங்ஸ் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் 12 ஆம் வகுப்பில் 88 சதவிகிதம் மதிப்பெண்கள் பெற்றுத் தேர்ச்சி பெற்றேன். அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளையில் உயர்கல்வி உதவித்தொகைக்கு விண்ணப்பித்தேன். உயர்கல்வி பயில விஐடி பல்கலைகழகத்தில் எம்.டெக். இண்டெகிரேடெட் படிப்பில் சேர்ந்தேன். அறக்கட்டளையின் நேர்முகத்தேர்வில், அறக்கட்டளையின் பணியாளர்கள் வீட்டிற்கு வருகைத்தந்து நேரடியாக விசாரித்து எனக்கு உயர்கல்வி பயில்வதற்கு உதவித்தொகை வழங்கினார்கள். தற்பொழுது நான் விஐடி இல் Web developer ஆகப் பணிபுரிகின்றேன். என் உயர்கல்விக்கும், என் போன்ற மாணவ, மாணவியர்களின் உயர்கல்விக்கும் உதவி செய்துகொண்டிருக்கும் அறக்கட்டளைக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**வ. ஜானகிராமன்**



என்னுடைய சிறுவயதிலேயே அப்பா இறந்துவிட்டார். அம்மா பள்ளிக்கூடத்தில் சத்துணவு அமைப்பாளராக வேலை செய்து என்னைப் படிக்க வைத்தார். இராணிப்பேட்டை மாவட்டம், வாலாஜா தாலுக்கா, சின்னசமுத்திரம் பகுதியில் வசிக்கிறேன். நான் பூண்டி அரசு மேல்நிலைப் பள்ளியில் 12ஆம் வகுப்பில் 73 சதவிகிதம் மதிப்பெண்கள் பெற்றுத் தேர்ச்சி பெற்றேன். அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை, பொருளாதார வசதியில்லாத மாணவர்களுக்கு உயர்கல்வி பயில்வதற்கு உதவித்தொகை வழங்கி வருவதை

என்னுடைய பள்ளி ஆசிரியரின் மூலம் அறிந்து, அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளையில் உதவித்தொகைக்கு விண்ணப்பித்தேன். பி.இ. மெக்கானிக்கல் இன்ஜீனியர் படிப்பில் உயர்கல்வி பயில சி. அப்துல் அக்கீம் கல்லூரியில் சேர்ந்த எனக்கு அறக்கட்டடையின் நேர்முகத்தேர்விற்கு அழைத்துக் குடும்பப் பொருளாதாரச் சூழ்நிலையைக் கேட்டறிந்து, என் வீட்டிற்கு வருகைதந்து நேரடியாக விசாரித்து எனக்கு உயர்கல்வி பயில்வதற்கு உதவித்தொகை வழங்கினார்கள். தற்பொழுது வி.கே.சி. கம்பெனியில் Retail Sales Executive ஆகப் பணிபுரிகிறேன். உயர்கல்வி பயில்வதற்கு வசதியில்லாத என் போன்ற மாணவர்களின் உயர்கல்விக் கனவை நனவாக்க ஊக்கமளித்துக் கொண்டிருக்கும் அறக்கட்டளைக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**கோ. சங்கவி**



நான் திருப்பத்தூர் மாவட்டம், கந்திலி தாலுக்கா, நத்தம் பகுதியில் வசிக்கிறேன். என்னுடைய அப்பா லாரி ஓட்டுநராக வேலை செய்கிறார். நான் நத்தம், அரசு மேல்நிலைப் பள்ளியில் 12ஆம் வகுப்பில் 66 சதவிகிதம் மதிப்பெண்கள் பெற்றுத் தேர்ச்சி பெற்றேன். நான் சேலம், விநாயக மிஷன் அன்னப்பூர்ணா செவிலியர் கல்லூரியில் பி.எஸ்.சி. செவிலியர், படிப்பில் சேர்ந்தேன். பொருளாதார வசதியில்லாத மாணவர்களுக்கு அறக்கட்டளை உதவித்தொகை வழங்கி வருவதாக அரசுப் பள்ளியில் நடந்த விழிப்புணர்வு நிகழ்வு மூலம் அறிந்து அறக்கட்டளையில் உதவித் தொகைக்கு விண்ணப்பித்தேன். அறக்கட்டளையில் நேர்முகத்தேர்விற்கு அழைத்துக் குடும்பப் பொருளாதாரச் சூழ்நிலையைக் கேட்டறிந்து, என் வீட்டிற்கு வருகைத்தந்து குடும்பச் சூழ்நிலையை நேரடியாக விசாரித்து எனக்கு உயர்கல்வி பயில உதவித்தொகை வழங்கினார்கள். தற்பொழுது சென்னை அப்போலோ பெண்கள் மருத்துவமனையில் Staff Nurse ஆகப் பணிபுரிகிறேன். என் உயர்கல்விக்கும், என் போன்ற பல மாணவர்களுக்கும் உதவித்தொகை வழங்கி ஊக்கமளித்துக் கொண்டிருக்கும் அறக்கட்டளைக்கு என் சார்பிலும் என் போன்ற மாணவர்களின் சார்பிலும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**தி. சதிஷ் குமார்**




வேலூர் மாவட்டம், குடியாத்தம் தாலுக்கா, புவனேஸ்வரிப்பேட்டை பகுதியில் வசிக்கிறேன். என்னுடைய அப்பா பீடி சுற்றும் வேலை செய்கிறார். நல்லூர்ப்பேட்டை, அரசு மேல்நிலைப் பள்ளியில் 12 ஆம் வகுப்பில் 84 சதவிகிதம் மதிப்பெண்கள் பெற்றுத் தேர்ச்சி பெற்றேன். அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளையில் உயர்கல்வி உதவித்தொகைக்கு விண்ணப்பித்தேன். உயர்கல்வி பயில இராஜகோபால் பாலிடெக்னிக் கல்லூரியில் டிப்ளமோ மெக்கானிக்கல் இன்ஜினியரிங் படிப்பில் சேர்ந்தேன். அறக்கட்டளையின் நேர்முகத்தேர்வில், அறக்கட்டளையின் பணியாளர்கள் வீட்டிற்கு வருகைத்தந்து நேரடியாக விசாரித்து எனக்கு உயர்கல்வி பயில்வதற்கு உதவித்தொகை வழங்கினார்கள். தற்பொழுது நான் அம்பாலால் ரியல் எஸ்டேட் நிறுவனத்தில் Senior Sales Executive ஆகப் பணிபுரிகின்றேன். என் உயர்கல்விக்கும், என் போன்ற மாணவ, மாணவியர்களின் உயர்கல்விக்கும் உதவி செய்து கொண்டிருக்கும் அறக்கட்டளைக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். என் போன்ற மாணவர்களின் உயர்கல்விக்கு அறக்கட்டளையைப் பரிந்துரை செய்கிறேன்.



universalhighereducationtrust

## கல்வி உதவித்தொகை பெற்றவர்: 2012 - 2024: 8,680


### Gender





### First Generation Graduates




### Course




### School wise Beneficiaries Details



## அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளைக்கு நன்கொடை வழங்குதல்






விஐடி போபால் பல்கலைக்கழகத்தின் உதவித் துணைத் தலைவர் செல்வி. காதம்பரி ச. விசுவநாதன் அவர்களின் பிறந்தநாள் விழாவில் அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளைக்கு **Rs. 7,00,000** நன்கொடையாக வழங்கினார். அறக்கட்டளைத் தலைவர், விஐடி பல்கலைக்கழகத்தின் நிறுவுநர் மற்றும் வேந்தர் கல்விக்கோ முனைவர். கோ. விசுவநாதன் அவர்களுக்கு நியூயார்க் பிங்ஹாம்டன் பல்கலைக்கழகத்தில் மதிப்புறு முனைவர் பட்டம் பெற்றமைக்கு வேலூர் மாவட்ட அனைத்து சங்கங்களும் இணைந்து நடத்திய பாராட்டு விழாவில் **Rs. 5,00,000** அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளைக்கு நன்கொடையாக வழங்கினார்கள்.

### அறக்கட்டளை உறுப்பினர்கள்



அறக்கட்டளையின் இந்த மகத்தான சேவையில் தாங்களும் பங்கு பெற்றுத் தங்கள் வீட்டில் நடக்கும் பிறந்தநாள், திருமணநாள் மற்ற இனிய நிகழ்வுகளின் மகிழ்ச்சியோடு அறக்கட்டளைக்கு நன்கொடை வழங்கி ஏழை மாணவர்களின் உயர்கல்விக்கு உதவலாம். இதன் மூலம் அவர்களின் வாழ்வில் ஆக்கப்பூர்வமான மாற்றத்தை ஏற்படுத்தலாம்.

**தாங்கள் வழங்கும் நன்கொடைக்கு வருமானவரிச் சட்டம் 80G பிரிவின் கீழ் வரிவிலக்கு உண்டு.**

### முகவரி

உதவி திட்ட இயக்குநர்
அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை,
அறை எண்: 215, டாக்டர். எம்ஜிஆர் பிளாக்,
விஐடி வளாகம், வேலூர் - 632 014.
தமிழ்நாடு, இந்தியா.
தொலைபேசி : 0416 - 220 2196, 8428408872

### வங்கி விவரம்

**Universal Higher Education Trust (UHET),**
CA. No : 6063960011,
Indian Bank, VIT Branch,
Katpadi, Vellore - 632 014.
IFS Code : IDIB000V086

**DONATE**

**இசைபட வாழ்தல் ஈதலே என்பதை உணர்வோம்!**

**மகிழ்வித்து மகிழ்ந்திருப்போம்!**